செ.வெ.எண்: 48 நாள்: 20.11.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், புதுக்கோட்டை மாவட்ட பிரிவு சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 19.11.2016 அன்று நடைபெற்றது.

இந்த மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கி கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி 2016-17-ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 21 வயதுக்குட்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் இருபாலருக்கும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் 18.11.2016 முதல் 19.11.2016 வரை இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் தடகளம், நீச்சல், கடற்கரை கையுந்து பந்து, குத்துச்சண்டை, பென்சிங், ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, ஜூடோ, டேக்வாண்டோ மற்றும் பளு தூக்குதல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.

இதில் பளுதூக்கும் போட்டியில் ஆண்கள் 56 கிலோ எடை பிரிவில் மணிகண்டன் முதலிடத்தையும், கௌதம் இரண்டாம் இடத்தையும், அசார் மூன்றாம் இடத்தையும், பெண்கள் 48 கிலோ எடை பிரிவில் வான்விழி முதலிடத்தையும், அழகுமீனாள் இரண்டாம் இடத்தையும், மணிமேகலை மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். டேக்வாண்டோ போட்டியில் ஆண்கள் 50 கிலோ எடை பிரிவில் முத்துமுருகேசன் முதலிடத்தையும், பிரவீன் வெங்கடேஷ் இரண்டாம் இடத்தையும், தாமரைக்கண்ணன் மூன்றாம் இடத்தையும், பெண்கள் 43 கிலோ எடை பிரிவில் யமுனா முதலிடத்தையும், பிரியங்கா இரண்டாம் இடத்தையும், திவ்யா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

கடற்கரை கையுந்து பந்து போட்டியில் கீரமங்கலம் அணியினர் முதலிடத்தையும், புதுக்கோட்டை வைரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இரண்டாம் இடத்தையும், திருமயம் அண்ணா கையுந்துப்பந்து கழகம் மூன்றாம் இடத்தையும், மகளிர் போட்டியில் கம்பன் கையுந்துப்பந்து கழகம் முதலிடத்தையும், வைரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இரண்டாம் இடத்தையும், பனையப்பட்டி அன்புக்கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். இதே போன்று தடகளம், குத்துச்சண்டை, நீச்சல் உள்ளிட்ட போட்டிகளில் பல்வேறு பிரிவுகளின் கீழ் நடைபெற்ற போட்டியில் பல்வேறு நபர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மேலும் இப்போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடம், இரண்டாமிடம் மற்றும் மூன்றாமிடம் பெற்றவர்களுக்கு முறையே ரூ.1000, ரூ.750 மற்றும் ரூ.500 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்த மாவட்ட அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சா.வாஞ்சிநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**